

ஒரு இலாப நோக்கற்ற அமைப்பான YSSN, வளர்ச்சிக் குறைபாடுகள், மனநலத் தேவைகள் மற்றும் நெருக்கடியை எதிர்கொள்ளும் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு ஆதரவளிக்கின்றது.

24/7 நேரடி நெருக்கடிகால ஆதரவு சேவை, அணுகல் சேவைகள் மற்றும் சேவை ஒருங்கிணைப்பு மூலம், மக்கள் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், சரியான நேரத்தில், தங்கள் தனித்துவமான தேவைகளுக்கு ஏற்ப சரியான ஆதரவைப் பெறுவதற்காக ஒரு நெறிப்படுத்தப்பட்ட செயல்முறையை YSSN வழங்குகிறது.

YSSN

YOUR SUPPORT SERVICES NETWORK

**1-866-257-9776**

தொலைபேசி எண்: **905-898-6455** TTY: **1-866-323-7785**

உதவி தேவையா, எதிர்பார்ப்பு தேவையா?
எங்கள் 24/7 நெருக்கடி கால உதவி எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்:
**1-855-310-COPE (2673)**

தற்கொலை பற்றி எண்ணுகிறீர்களா அல்லது வேறு யாரையாவது நினைத்துக் கவலைப்படுகிறீர்களா?
தற்கொலைத் தடுப்பு உதவி எண்ணைத் தொடர்புகொள்ளவும்: **9-8-8**

3 – 240 Edward Street
Aurora, ON L4G 3S9

எங்கள் அலுவலகம் பொதுமக்களுக்கு திறந்திருக்கும் நேரம்
திங்கள்-வெள்ளி, காலை
8:30 - மாலை 4:30 மணி வரை
வருகை வரவேற்கப்படுகிறது

**YSSN.ca**

YSSN தனது சேவைகளை யார்க் பிராந்தியம் மற்றும் அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கும் வழங்குகிறது.

**இது உங்கள் பயணம், இது உங்களுக்கான வழி.**

YSSN-இன் அணுகல் சேவைகள், ஒருங்கிணைப்பு சேவைகள் மற்றும் நெருக்கடி சேவைகளுக்காக CARF இதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

2024 அக்டோபர்

MN001



# உங்கள் ஆதரவு சேவைகளுக்கான நெட்வொர்க்

YSSN என்பது வளர்ச்சி, மனநலம், நெருக்கடி மற்றும் குழந்தைகள் சேவைகளுக்கான ஒரு மையமாகும், இது மக்களை அவர்களின் சிறந்த வாழ்க்கையை வாழத் தேவையான சேவைகள் மற்றும் ஆதரவுகளைப் பெறுவதற்கு உதவுகிறது.

YSSN

YOUR SUPPORT SERVICES NETWORK

# உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் உங்களுக்கு ஆதரவளிக்கும் தொடர்புகளை உருவாக்குவதற்காகவே YSSN இங்கே உள்ளது.

## YSSN இன் நெருக்கடி கால சேவைகள்

24/7 உங்களுக்காகவே உள்ளன - நீங்கள் தனியாக இல்லை! எங்கள் பராமரிப்புக் குழு நீங்கள் இருக்கும் இடத்திற்கே வந்து உங்களைச் சந்தித்து உங்கள் நெருக்கடி காலத்தின் போது உங்களுடனே சேர்ந்து பயணிக்கும்.

நெருக்கடிகாலத்தில் உள்ளவர்கள் மற்றும்/அல்லது நெருக்கடிகாலத்தில் உள்ள குடும்பங்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்ய சரியான சமூக ஆதாரவளங்கள், ஆதரவுகள் மற்றும் சேவைகளுடன் அவர்களை இணைக்கிறோம். தொலைபேசி, ஆன்லைன் உரையாடல் வசதி அல்லது குறுஞ்செய்தி மூலம் ஆதரவைப் பெறுங்கள்.

**“YSSN எனக்கு ஒரு அவசரகாலத்திற்கான ஒரு படுக்கையைத் தந்தது... இறுதியாக, நான் பாதுகாப்பாக இருந்தேன், சாப்பிட உணவு கிடைத்தது. அன்று YSSN எனக்கு உதவி செய்யவில்லை என்றால், இன்று நான் இந்த நிலையில் இருந்திருப்பேனா என்று எனக்குத் தெரியவில்லை. இப்போது என் பொறுப்பில் இருக்கும் ஒரு வாழ்க்கையை நான் வாழ்கிறேன்.”**

## YSSN இன் அணுகல் சேவைகள்

சனசமூக தொடர்புகளுக்கான உங்கள் நுழைவாயிலாகும். இந்தக் கதவு உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் தேவையான பல்வேறு ஆதாரவளங்கள், ஆதரவுகள் மற்றும் சேவைகளை நீங்கள் அடைய உதவுகிறது.

சரியான நேரத்தில் சரியான வளர்ச்சி சேவைகள், மனநலம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு பராமரிப்பு ஆகியவற்றிற்கு நாங்கள் தடையற்ற மற்றும் சமமான அணுகலை வழங்குகிறோம்.

உங்கள் பயணத்திற்கான சரியான திட்டங்கள் மற்றும் சேவைகளைக் கண்டறிய எங்கள் பராமரிப்பு குழு உங்களுடன் இணைந்து செயல்படும்.

**“எனது மகனும் எங்கள் குடும்பமும் எங்கள் வாழ்க்கையின் மிகவும் கடினமான காலகட்டத்தை கடந்து வந்துள்ளோம். எங்கள் வழக்கு மேலாளர் ஒவ்வொரு நிகழ்வுகளுடனும் எங்களுடன் இருந்தார்... YSSN-இன் ஆதரவுடன், இப்போது மீண்டும் ஒரு ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை அனுபவித்து வருகிறோம்.”**

## YSSN இன் ஒருங்கிணைப்பு சேவைகள்

உங்கள் வாழ்க்கை இலக்குகளை வளர்த்துக் கொள்ள உங்களுடன் இணைந்து செயல்படுகின்றன! பிறந்தது முதல் பெரியவர்களாகும் வரை, உங்கள் இலக்குகளைத் திட்டமிடுவதில் எங்கள் குழு உங்களுக்கு ஆதரவு அளிக்கின்றது மேலும் அவற்றை நனவாக்க உங்களுக்குத் தேவையான சேவைகள் மற்றும் ஆதரவுகளுடன் உங்களைத் தொடர்பு கொள்ள வைக்கின்றது.

எங்கள் குழு உங்கள் பயணத்தில் முழுமையாக ஈடுபட்டுள்ளது! நாங்கள் பலவிதமான தேவைகள், வளர்ச்சிக் குறைபாடுகள், மற்றும் மனநோய் உள்ளவர்களையும், மோசமான பழக்கங்களுக்கு அடிமையாக உள்ளவர்களையும், அல்லது வீடற்றவர்களையும் சமூக திட்டங்கள் மற்றும் கூட்டாளர்கள் மூலம் அளிக்கப்படும் வளங்கள், ஆதரவுகள் மற்றும் சேவைகள் போன்றவற்றுடன் இணைக்கிறோம். இதே மாதிரியான பாதைகளைக் கடந்து வந்துள்ள தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்களை இணைக்கும் சக ஆதரவாளர்களுடன் இணைந்திருங்கள்.

**“எனது மனநல மருத்துவர் மற்றும் மருந்துகளைப் போலவே, YSSN இன் ஊழியர்களும் எனது ஒட்டுமொத்த மன நலனுக்கு முக்கியமானவர்கள். இவர்கள் உங்கள் மேல் உண்மையிலேயே அக்கறை காட்டுபவர்கள்!”**



**YSSN உங்களுக்காகவே உள்ளது! உங்களுக்கு எப்படி, எங்கு சிறந்த ஆதரவை வழங்கமுடியுமோ அங்கு எங்கள் சேவைகளை வழங்குகிறோம். எங்கள் சேவைகளுக்குக் கட்டணம் எதுவும் இல்லை.**